











இர்ஷாத்







இஸ்லாமிய சிறுவர் பாடநூல்

தொகுப்பு

மௌலவி, அல்ஹாஜ்,

A.A. ஷேக் அப்துல் காதிர் மன்பஈ

(இர்பானி ஷாஹ் நூரி)

வெளியீடு

பாபுஸ் ஸலாம் அரபிக் கல்லூரி

திருப்பூர், பள்ளப்பட்டி.

Cell : 98942 90086

ஐந்தாம் பதிப்பு : ஹிஜ்ரி 1436 கி.பி. 2014 ஏப்ரல்

எட்டாம் பதிப்பு : ஹிஜ்ரி 1447 ரபிஉல் அவ்வல், ஆகஸ்ட் 2025

இந்நூல் கிடைக்குமிடங்கள் :

மௌலவி A.S. ஜுபைர் அஹ்மத் பாகவி
(ஷுஹுதீ ஷாஹ் பைஜீ)
பேராசிரியர், ஜாமிஆ அரபிய்யா
பைஜுல் ஹஸனாத் அரபிக் கல்லூரி,
பொரவச்சேரி, சிக்கல் (P.O.) நாகை
Cell : 98942 90089

மௌலவி, ஹாபிழ் A.S.அஸ்அத் அஹ்மத் பையாஜி
(ஷஹ்வீ ஷாஹ் பைஜீ)
முதல்வர், ஜாமிஆ இர்பானிய்யா அரபிக் கல்லூரி,
ஆஜாத் நகர், சூரமங்கலம்,
சேலம் - 636005.
Cell : 98943 98867

மௌலவி A.S. அபுல் ஹஸன் பாகவி பைஜீ
அரபித்துறை, கிரஸன்ட் ஸ்கூல்,
வண்டலூர், சென்னை - 48.
Cell : 98949 94481

மௌலவி A.S. முஹம்மது பாகவி பைஜீ
இமாம், மஸ்ஜிதே நூர், ஸ்ரீநகர் காலனி,
கும்பகோணம் - 612 001.
Cell : 99442 30292

பஷாரத் பப்ளிஷர்ஸ்
83, அங்கப்ப நாயக்கன் தெரு,
சென்னை - 600 001.
போன் : 044 - 2522 5028

முகவுரை

நஹ்மதுஹு வனுஸல்லி அலா ரசூலிஹில் கரீம்...

இந்நூல் 8 முதல் 14 வயது வரை உள்ள இஸ்லாமிய சிறுவர், சிறுமிகளுக்காக எழுதப்பட்டது. மக்தப்களிலும் இஸ்லாமிய பள்ளிகளிலும் பாடத்திட்டமாக வைக்கலாம். மேலும் கோடை விடுமுறையில் 40 நாட்கள் சிறப்பு வகுப்புகள் நடத்தியும் இதை கற்றுத் தரலாம்.

இத்துடன் நபிமார்களின் வரலாறுகளையும் நாயகம் (ஸல்) அவர்களின் வரலாறுகளையும் கற்றுத்தந்து கடைசியில் பரிட்சை நடத்த வேண்டும் '**பரிசளிப்பு விழா**' போன்று ஏற்பாடு செய்து இதிலுள்ள பாடங்களையே ஒவ்வொரு தலைப்பிலும் பயானாகவும் உரையாடல்களாகவும் பேசச் செய்யலாம் ! கிராஅத் மற்றும் இஸ்லாமிய பாடல்களையும் மாணவர்களுக்குக் கற்றுத் தரலாம் !

இந்த பாடங்களை முடித்தவர்களுக்கு அடுத்த பாடங்களாக '**தல்கீன்**' '**தஹ்ஸீன்**' போன்ற எளிய கிதாபுகளையும் அதற்குப் பின் '**பிக்ஹின் கலைக் களஞ்சியம்**' போன்ற பெரிய கிதாபுகளையும் படித்து கொடுக்க ஏற்பாடு செய்ய வேண்டும்.

ஒவ்வொரு மஸ்ஜித்களிலும் 10 ஆம் வகுப்புகளுக்கு மேல் பயிலும் மாணவர்களுக்கு மற்றும் திருமணமானவர்கள், பெரியவர்களுக்கும் கூட ஒரு வருட DIE (Dimplamo in Islamic Education) கோர்ஸ் பாடம் நடத்த ஏற்பாடு செய்ய வேண்டும். மாணவர்களின் சனி, ஞாயிறு விடுமுறைகள் மற்றும் அரசு விடுமுறை காலாண்டு, அரையாண்டு, முழு ஆண்டு விடுமுறைகளில் ஒரு நாளைக்கு 3 மணி நேரம் மட்டும் பாடம் எடுக்க வேண்டும். அதில் கொள்கைகள்

சட்டதிட்டங்கள், வரலாறு, மனனப்பகுதி சூராக்கள், துஆக் கள் இவைகள் அனைத்தும் கற்றுக் கொடுக்கலாம் !

மேலும் நல்ல திறமையான ஆலிம்களை உடைய மஸ்ஜித்களில் DUA (Diplamo in Urdu and Arabic) எனும் 3 வருட பட்டப் படிப்பை துவங்க வேண்டும். அதில் அடிப்படை அரபி இலக்கணங்களும் மற்றும் குர்ஆன் ஹதீஸைப் பார்த்து அறிந்து கொள்ளும் அளவுக்கு மொழிப் பயிற்சி மற்றும் தப்சீர் – பிக்ஹ் சட்டங்களை கற்றுக் கொடுக்கலாம்.

இதற்கு முயற்சி செய்யும் ஊர் ஜமாஅத்தார்களும் மதரஸா நிர்வாகிகளும் தொடர்பு கொண்டால் அதற்கான பாடத் திட்டங்களையும் மற்ற விபரங்களையும் இன்ஷா அல்லாஹ் அனுப்பி வைக்கிறோம். மேலும் பரீட்சைகளை நமது **'ஜாமிஆ இர்பானிய்யா'** அரபிக் காலேஜின் கேள்வித் தாள்கள் மூலம் நடத்தினால் அதற்கு மதரஸாவின் சார்பாகவே DIE மற்றும் DUA டிப்ளமாக்கள் வழங்கப்படும்.

மார்க்கச் சட்டங்களை பாடல் வடிவில் பாடி மனனம் செய்ய '**இஸ்லாமிய பாலர் பாடல்கள்**' எனும் நூலும் நபி (ஸல்) அவர்கள் ஒவ்வொரு செயலிலும் கற்றுக்கொடுத்த ஒழுக்க முறைகளை அறிய '**திரு நபியின் தினசரி வாழ்க்கை**' என்ற நூலும் நம்மிடம் கிடைக்கும் – இவையும் மாணவர்களுக்கு மிகவும் பயனுள்ளதாகும்.

அல்லாஹ் இந்நூல்களை கியாமத் வரை பலனுள்ளதாக ஆக்குவானாக – ஆமீன்

இங்ஙனம்

இர்பானீஷாஹ் நூரி

சூரமங்கலம், சேலம்-5.

பிஸ்மில்லாஹிர் ரஹ்மானிர் ரஹீம்

பகுதி – 1

அகீதா – கொள்கைகள்

1. இஸ்லாத்துடைய கலிமா என்ன?

"லாயிலாஹ இல்லல்லாஹு
முஹம்மதுர் ரசூலுல்லாஹி"

வணக்கத்திற்கு தகுதியானவன் அல்லாஹுத் தஆலாவைத் தவிர வேறு யாரும் இல்லை. முஹம்மத் நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் அல்லாஹ்வுடைய திருத்தூதராக இருக்கிறார்கள்.

2. நம்மை படைத்தது யார்?

நம்மையும் நமது தாய், தந்தை, வானம், பூமி இன்னும் எல்லாப் பொருட்களையும் அல்லாஹ் தான் படைத்தான்.

3. அல்லாஹ் நம்மை படைத்ததன் நோக்கம் என்ன?

அல்லாஹ்வை அறிவதற்கும் அவனை வணங்கு வதற்கும் தான் அல்லாஹ் நம்மை படைத்தான்.

4. அல்லாஹ்வை மட்டும் ஏன் வணங்க வேண்டும்?

எல்லா படைப்புகளின் எல்லாத் தேவைகளையும் அல்லாஹ் மட்டுமே பூர்த்தி செய்கிறான். எனவே அல்லாஹ்வை வணங்க வேண்டும்.

5. 'இஸ்லாம்' என்றால் என்ன?

இஸ்லாம் என்றால் ஒப்புக் கொள்வதும் வழிபடுவதும் ஆகும். அதாவது அல்லாஹ் ஏவியதை செய்வதும் அல்லாஹ் தடுத்ததை விட்டு விடுவதும் ஆகும்.

6. இஸ்லாத்தின் கடமைகள் எத்தனை?

இஸ்லாத்தின் கடமைகள் ஐந்து:-

1. கலிமா
2. தொழுகை
3. நோன்பு
4. ஜகாத்
5. ஹஜ்

7. தொழுகை என்றால் என்ன?

தொழுகை என்பது அல்லாஹ்வை வணங்கும் ஒரு முறையாகும். அடியார்கள் தங்களின் நன்றியையும் பணிவையும் அல்லாஹ்விடம் தெரிவிப்பதற்கும், அல்லாஹ்விடம் தன் தேவைகளை கேட்பதற்கும் தொழுகையை அல்லாஹ் ஏற்படுத்தியுள்ளான்.

8. ஒரு முஸ்லிம் எத்தனை நேரம் தொழுவது கடமை?

ஒவ்வொரு நாளும் ஐந்து நேரம் தொழுவது ஒவ்வொரு முஸ்லிமின் மீதும் கடமையாகும்.

1. பஜர் - 2 ரக அத்
2. லுஹர் - 4 ரக அத்
3. அஸர் - 4 ரக அத்
4. மஃரிப் - 3 ரக அத்
5. இஷா - 4 ரக அத்

9. 'நோன்பு' என்றால் என்ன?

காலை சுப்ஹு நேரத்தில் இருந்து சூரியன் மறையும் வரை அல்லாஹ்வுக்காக எதையும் சாப்பிடாமல் குடிக்காமல் இருப்பது நோன்பு ஆகும். ரமலான் மாதம் முழுவதும் நோன்பு வைப்பது ஒவ்வொரு முஸ்லிமின் மீதும் கடமையாகும்.

10. 'ஜகாத்' என்றால் என்ன?

ஒவ்வொரு வருடமும் தனது சொத்துக்களை கணக்கிட்டு அதில் நாற்பதில் ஒரு பங்கை ஏழைகளுக்கு கொடுப்பது ஜகாத் எனப்படும். வசதியுள்ள ஒவ்வொரு முஸ்லிமும் ஒவ்வொரு வருடமும் ஜகாத் கொடுப்பது கடமையாகும்.

11. 'ஹஜ்' என்றால் என்ன?

துல்ஹஜ் மாதம் மக்காவுக்குச் சென்று கஃபாவைச் சுற்றி வந்து அல்லாஹ்வை வணங்குவது ஹஜ் எனப்படும். வசதியுள்ள ஒவ்வொரு முஸ்லிமும் வாழ்நாளில் ஒரு தடவை ஹஜ் செய்வது கடமையாகும்.

ஈமான்

12. 'ஈமான்' என்றால் என்ன?

அல்லாஹ்வையும் அவனது ரசூலையும் ஏற்றுக் கொள்வதும் அவர்களின் போதனைகளை மனதால் உறுதி கொள்வதும் ஈமான் எனப்படும்.

13. ஈமானின் நிபந்தனைகள் என்ன?

ஈமானின் நிபத்தனைகள் இரண்டு:

1. நாவால் மொழிவது!
2. மனதால் உண்மைப்படுத்துவது!

14. ஈமானின் பிரிவுகள் எத்தனை?

ஈமானின் பிரிவுகள்: 7

1. அல்லாஹ்வைக் கொண்டு ஈமான் கொள்வது!
2. மலக்குகளைக் கொண்டு ஈமான் கொள்வது!
3. வேதங்களைக் கொண்டு ஈமான் கொள்வது!
4. நபிமார்களைக் கொண்டு ஈமான் கொள்வது!
5. கியாமத்து நாளைக் கொண்டு ஈமான் கொள்வது!
6. நன்மையும், தீமையும் அல்லாஹ்வின் விதிப்படித்தான் நடக்கிறது என்பதை ஈமான் கொள்வது!
7. மனிதன் இறந்த பின் மீண்டும் உயிருடன் எழுப்பப்படுவான் என்பதை ஈமான் கொள்வது!

அல்லாஹ்

15. அல்லாஹ்வைக் கொண்டு ஈமான் கொள்வது எப்படி?

1. அல்லாஹ் ஒருவன் - அவனுக்கு இணையும், துணையும் இல்லை - ஆரம்பமும் முடிவும் இல்லை.
2. வணக்கத்திற்குத் தகுதியானவன் அல்லாஹுத் தஆலாவைத் தவிர வேறு யாருமில்லை.
3. அவன் தேவையற்றவன்! நமது தேவைகளை அவனே பூர்த்தி செய்கிறான்!
4. அவனுக்கு தாய், தந்தை, மனைவி, பிள்ளைகள் கிடையாது!

5. அனைத்து உலகத்தையும் அவனே படைத்து வளர்த்து பாது காத்து வருகிறான்!

6. அல்லாஹ் எங்கே இருக்கிறான்?

1. அல்லாஹ் எல்லா இடத்திலும் இருக்கிறான்.
அவன் இல்லாத இடமே இல்லை.
2. அவன் எல்லாப் பொருட்களிலும் இருக்கிறான் அவன் இல்லாத பொருளே இல்லை.
3. ஏழு வானங்கள் பூமி, சூரியன், சந்திரன், நட்சத்திரங்கள் அர்ஷ், குர்ஷ் எல்லா இடங்களிலும் அவன் இருக்கிறான்.

17. இறைவனின் தன்மைகள் யாவை?

1. உயிருள்ளவன்
2. அறிவுள்ளவன்
3. நாட்டமுள்ளவன்
4. சக்தியுள்ளவன்
5. கேட்கக் கூடியவன்
6. பார்க்கக் கூடியவன்
7. பேசக் கூடியவன்

(ஹயாத், இல்ம், இராதத், குத்ரத், சமாஅத், பசாரத், கலாம் உடையவன்)

மலக்குகள்

8. மலக்குகள் மீது ஈமான் கொள்வது எப்படி?

1. மலக்குகள் ஒளியால் படைக்கப்பட்டவர்கள்
2. அவர்களில் ஆண், பெண் என்ற பிரிவுகள் இல்லை
3. அவர்களுக்கு உணவு, உறக்கம் கிடையாது!
4. அவர்கள் அல்லாஹ்வின் கட்டளைகளை அப்படியே நிறை வேற்றுவார்கள்.
5. அவர்கள் பாவமே செய்ய மாட்டார்கள்!

19. மலக்குகள் எத்தனை பேர்?

மலக்குகளின் எண்ணிக்கையை அல்லாஹ்வே அறிவான்.

முக்கியமான மலக்கு மார்கள் நான்கு பேர்:

1. ஜிப்ரயீல் (அலைஹிஸ்ஸலாம்) அவர்கள் நபிமார்களுக்கு வஹி (இறை செய்தி) கொண்டு வருவார்கள்.
2. மீகாயில் (அலை) – இவர்களின் வேலை மழை பொழியச் செய்வது.
3. இஜ்ராயீல் (அலை) – இவர்களின் வேலை உயிரை வாங்குவது
4. இஜ்ராபீல் (அலை) – இவர்களின் வேலை கியாமத்து நாளில் சூர் ஊதுவது!

வேதங்கள்

20. வேதங்களைக் கொண்டு ஈமான் கொள்வது எப்படி?

1. வேதங்கள் என்பது அல்லாஹுத் தஆலாவுடைய பேச்சுக்கள் ஆகும்.
2. அதை ஜிப்ரயீல் (அலை) அவர்கள் மூலம் அல்லாஹ் நபிமார்களுக்கு இறக்கி வைத்தான்.

வேதங்களில் மொத்தம் நான்கு :

1. தவ்ராத் 2. ஜபூர்
3. இன்ஜீல் 4. குர்ஆன்.

தவ்ராத்	மூஸா	அப்ரானீ
ஜபூர்	தாவூத்	யூனானீ
இன்ஜீல்	ஈஸா	சுர்யானீ
குர்ஆன்	முஹம்மத்	அரபானீ

நபிமார்கள்

21. நபிமார்களைக் கொண்டு ஈமான் கொள்வது எப்படி?

1. மனிதர்களுக்கு நேர்வழி காட்டுவதற்காக மனிதர்களிலேயே சிலரை அல்லாஹ் தன் தூதர்களாக ஆக்கினான்.
2. அவர்களுக்கு வஹி மூலமாக கல்வி ஞானங்களை அளித்தான். வேதங்களையும் கொடுத்தான்!

3. அவர்களுக்கு முஃஜிஜா என்னும் அற்புதங்களையும் கொடுத்தான்.

4. அவர்கள் நபி பட்டம் கிடைப்பதற்கு முன்னும் பின்னும் சிறிய பாவமோ, பெரிய பாவமோ செய்ய மாட்டார்கள்.

22. நபிமார்கள் எத்தனை பேர்?

சுமார் ஒரு இலட்சத்து இருபத்து நான்காயிரம் நபிமார்களை அல்லாஹ் அனுப்பினான். இவர்களில் முன்னூற்றுப் பதிமூன்று பேர் ரசூல் மார்கள்.

முதல் நபி	-	ஆதம் (அலி)
இறுதி நபி	-	முஹம்மத் (ஸல்)

23. நபிமார்களை எப்படி மதிக்க வேண்டும்?

1. அவர்களின் பெயரை கண்ணியத்தோடு சொல்ல வேண்டும்.
2. அவர்களின் பெயரைக் கேட்டால் அலைஹிஸ்ஸலாம் என்று சொல்ல வேண்டும்.
3. அவர்களின் குடும்பத்தாரையும், தோழர்களையும் மரியாதை யுடன் பேச வேண்டும்.
4. நபிமார்களை கேலி செய்பவன், குறை சொல்பவன் காபிர் ஆவான்!

24. நமது நபி முஹம்மத் (ஸல்) அவர்களின் சிறப்பு என்ன?

1. நமது நபி முஹம்மத் (ஸல்) அவர்கள் அல்லாஹ்வின் படைப் பினங்கள் அனைத்திலும் மேலானவர்கள்.
2. நபிமார்கள் அனைவருக்கும் தலைவர் ஆவார்கள்!
3. அல்லாஹ் முதன் முதலில் முஹம்மத் (ஸல்) அவர்களின் நூரைப் படைத்தான். அதில் இருந்து தான் எல்லாப் பொருட் களையும் படைத்தான்.
4. அவர்களுக்கு பின் வேறு நபியில்லை. கியாமத் வரை அனைவருக்கும் அவர்களே நபியாவார்கள்!
5. மறுமை நாளில் மக்கள் அனைவருக்கும் அவர்கள் ஷபாஅத் செய்வார்கள்.
6. அவர்கள் தான் முதன் முதலில் சொர்க்கம் செல்வார்கள்!

25. நமது நபி முஹம்மத் (ஸல்) அவர்களை எப்படி கண்ணியப் படுத்த வேண்டும்?

1. அவர்கள் பெயரைக் கேட்டால் "ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்" என்று சொல்ல வேண்டும்.
2. அவர்களை நம் உயிரைவிட மேலாக நேசிக்க வேண்டும்!
3. அவர்களின் கட்டளைகளை ஏற்று நடக்க வேண்டும்! அவர்களின் சுன்னத்களை பின்பற்ற வேண்டும்.
4. அவர்களின் மீது அதிகமாக ஸலாத்தும் ஸலாமும் ஓத வேண்டும்.

"ஸல்லல்லாஹு அலா முஹம்மத்
ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்"

கியாமத்

26. கியாமத் நாளைக் கொண்டு ஈமான் கொள்வது எப்படி?

1. இந்த உலகமும் அதிலுள்ள அனைத்து வஸ்துக்களும் ஒரு நாள் அழிந்து விடும்!
2. அல்லாஹுவைத் தவிர வேறு எதுவும் இருக்காது!
3. பிறகு அல்லாஹ் மீண்டும் இந்த உலகத்தை உண்டாக்குவான்!
4. மனிதர்கள் அனைவருக்கும் மீண்டும் உயிர் கொடுத்து எழுப்பி கேள்வி கணக்கு கேட்பான்!
5. முஃமின்களை சொர்க்கத்திற்கும் காபிர்களை நரகத்திற்கும் அனுப்புவான்!

27. கியாமத் நாளின் அடையாளங்கள் என்ன?

1. உலகில் பாவங்களும், அநியாயங்களும் அதிகமாகிவிடும்!
2. தஜ்ஜால் வந்து பெரும் குழப்பங்கள் செய்வான்.
3. ஈஸா (அலை) அவர்கள் வந்து தஜ்ஜாலை அழிப்பார்கள்.
4. யஃஜூஜ் மஃஜூஜ் கூட்டத்தார்கள் வருவார்கள்.
5. சூரியன் மேற்கே உதயமாகும்.
6. தாப்பதுல் அர்ள் எனும் மிருகம் வரும்!
7. கடைசியாக சூர் ஊதப்படும். அப்போது வானம், பூமி, சூரியன், சந்திரன், நட்சத்திரங்கள், மலைகள் அனைத்தும் தூள் தூளாக சிதறி அழிந்து விடும்!

28. மரணமாகும் மனிதனின் நிலை என்ன?

1. மரண நேரத்தில் சகராத் எனும் சிரமம் ஏற்படும். நல்லடியார் களுக்கு அல்லாஹ் சகராத்தை இலேசாக்குவான்!
2. கப்ரில் வைத்தவுடன் முன்கர், நகீர் எனும் இரண்டு மலக்குகள் வந்து கேள்வி கேட்பார்கள். உனது ரப்பு யார்? உனது நபி யார்? உனது மார்க்கம் என்ன? என்று கேட்பார்கள்.
3. முஃமின்கள் சரியான பதிலைக் கூறுவார்கள்!
எனது ரப்பு அல்லாஹ்! எனது நபி முஹம்மத் (ஸல்)!
எனது மார்க்கம் இஸ்லாம்! என்று கூறுவார்கள்
காபிர்கள் தெரியாது! என்று கூறுவார்கள்!
4. கப்ரில் முஹம்மத் (ஸல்) அவர்களைக் காட்டப்படும்.
இவர்கள் யார்? என்று கேட்கப்படும்!
முஃமின்கள் எங்கள் நபி என்று கூறுவார்கள்!
காபிர்கள் தெரியாது என்று கூறுவார்கள்!
5. முஃமின்களின் கப்ர்கள் சொர்க்கத்தின் பூஞ்சோலைகளாக மாற்றப்படும்! காபிர்களுக்கு நரகத்தின் படுகுழிகளாக ஆக்கப் பட்டு வேதனை செய்யப்படும்!

29. மஹ்ஷரின் நிலை என்ன?

1. இரண்டாவது சூர் ஊதப்பட்டவுடன் மக்கள் அனைவரும் எழுப்பப் பட்டு மஹ்ஷர் மைதானத்தில் ஒன்று சேர்க்கப்படுவார்கள்.
2. நல்லவர்களுக்கு அவர்களின் பட்டோலை வலது கையிலும் தீயவர்களுக்கு இடது கையிலும் தரப்படும்!
3. உலகில் அவர்கள் செய்த செயல்களை விசாரணை செய்யப்படும்!
4. மீஜான் என்னும் எடை தராசில் நன்மை தீமைகள் எடை போடப்படும்!
5. சிராதுல் முஸ்தகீம் எனும் பாலத்தில் நடக்க வைக்கப்படும்!
6. முஹம்மத் நபி (ஸல்) அவர்களும், மற்ற நபிமார்களும், வலிமார்களும் ஷபாஅத் செய்வார்கள்.
7. முஃமின்கள் சொர்க்கத்திற்கும் காபிர்கள் நரகத்திற்கும் அனுப்பப் படுவார்கள்.

தக்தீர் - விதி

30. தக்தீர் எனும் விதியின் மீது ஈமான் கொள்வது எப்படி?

1. உலகில் நடந்தது, நடக்கப் போவது அனைத்தையும் அல்லாஹ் லவ்ஹுல் மஹ்பூள் எனும் பலகையில் எழுதி வைத்துள்ளாள். அதன் படி தான் எல்லாம் நடக்கிறது!
2. நன்மை, தீமை எல்லாம் அல்லாஹ்வின் விதிப்படி நடந்தாலும் நன்மையை அல்லாஹ் விரும்புகிறான்! தீமையை அல்லாஹ் வெறுக்கிறான்!
3. ஒவ்வொரு மனிதனின் வாழ்வு, மரணம், உணவு மற்றும் அனைத்து செயல்களும் எழுதப்பட்டுவிட்டது!
4. யார் சொர்க்கவாதி? யார் நரகவாதி? என்பதும் எழுதப்பட்டு விட்டது!

ஈமானைத் தடுப்பவை

31. ஈமானை தடுக்க கூடியவை யாவை?

1. குப்ர்.
2. ஷிர்க்
3. நிபாக்
4. இர்திதாத்

1. குப்ர் என்றால் அல்லாஹ்தான் வணக்கத்திற்கு தகுதியானவன் என்பதை மறுப்பது.
2. ஷிர்க் என்றால் அல்லாஹ்வுடன் இணை வைப்பது. அல்லாஹ் வுடன் மற்ற வஸ்துக்களை கூட்டாளியாக்குவது!
3. நிபாக் என்றால் நயவஞ்சகம். அதாவது ஈமானுடைய விஷயங் களில் சந்தேகம் வைப்பது. வெளிப்படையில் ஏற்றுக் கொண்டு உள்ளத்தால் மறுப்பது.
4. இர்திதாத் என்றால் ஒப்புக் கொண்டபின் மறுத்து விடுவது. அதாவது இஸ்லாத்தை விட்டும் மாறி காபிராகி விடுவது!

குப்ர் செய்பவன் காபிர்.

ஷிர்க் செய்பவன் முஷ்ரிக்

நிபாக் செய்பவன் முனாபிக்

இர்திதாத் ஆனவன் முர்தத்

– இந்த நான்கிற்கும் தண்டனை நிரந்தர நரகமாகும்!

32. எந்தெந்த செயல்களால் ஒரு முஸ்லிம் காபிர் ஆகி விடுகிறான்?

1. ஈமானுடைய விஷயங்களில் ஒன்றை மறுத்தாலும் அவன் காபிராகி விடுவான். (உதாரணமாக – மலக்குகள் இல்லை என்று சொல்பவன் காபிராகி விடுவான்)
2. ஈமானுடைய விஷயங்களில் ஒன்றை கேலி செய்பவனும் காபிராகி விடுவான்.
3. குர்ஆனுடைய ஆயத்துகளில் ஒன்றை மறுத்தாலும் காபிராகி விடுவான்.
4. அல்லாஹ் கடமையாக்கியதை மறுத்தாலும், அல்லாஹ் ஹராமாக்கியதை ஆகும் என்று சொன்னாலும் காபிராகி விடுவான்!
5. அல்லாஹ் ரசூலை குறை சொல்பவன் காபிராகி விடுவான்.
6. காபிர்களின் பண்டிகைகளை கொண்டாடுவது சிலைகளுக்கு மரியாதை செய்வது, கோவில்களில் பூஜை செய்வது போன்ற வற்றால் காபிராகி விடுவான்.
7. காபிர் நிரந்தர நரகம் செல்வான்; அவன் அல்லாஹ்விடம் பாவ மன்னிப்புக் கேட்டு கலிமா சொல்லி முஸ்லிமாகி விட்டால் சொர்க்கம் செல்வான்.

தவ்பா

33. ‘தவ்பா’ என்றால் என்ன?

1. பாவம் செய்த ஒருவன் அதற்காக வருத்தப்பட்டு அல்லாஹ்விடம் மன்னிப்புக் கேட்பதற்கு “தவ்பா” எனப்படும்!
2. குப்ர், ஷிர்க்கைத் தவிர மற்ற எல்லா பாவங்களையும் அல்லாஹ் தவ்பாவின் மூலம் மன்னித்து விடுகிறான்!
3. ஒரு முஸ்லிம் தன் பாவங்களுக்கு தவ்பா செய்யாமல் மரணம் அடைந்தால் அல்லாஹ் நாடினால் அவனை மன்னிக்கலாம்.

அல்லாஹ் நாடினால் சில காலம் நரகில் தண்டித்து பின்னர் சொர்க்கத்திற்கு அனுப்புவான்.

34. பெரும் பாவங்கள் யாவை?

1. கொலை, தற்கொலை
2. திருட்டு, கொள்ளை
3. மது அருந்துவது
4. வட்டி வாங்குவது
5. பொய், புறம், கேலி செய்வது
6. சூதாட்டம் ஆடுவது
7. பெற்றோர்களை வருத்தப்படுத்துவது
8. தொழுகை, நோன்பு போன்ற கடமைகளை விடுவது.

தக்வா

35. தக்வா என்றால் என்ன?

தக்வா என்றால் பயப்படுவதும் பேணுவதும் ஆகும். அதாவது அல்லாஹ்வை பயப்படுவதும், அவனுக்கு பொருத்தமில்லாத காரியங்களை விட்டுவிடுவதும் ஆகும். ஒரு முஸ்லிம் தக்வா செய்தால் அல்லாஹ்வின் நேசராக (வலியாக) ஆகலாம்.

திக்ர்

36. திக்ர் என்றால் என்ன?

1. திக்ர் என்றால் அல்லாஹ்வை ஞாபகம் செய்வது
2. அல்லாஹ்வை திக்ர் செய்வது ஒவ்வொரு முஸ்லிமின் மீதும் கடமையாகும்.
3. வணக்கங்கள் அனைத்தின் நோக்கமும் அல்லாஹ்வை திக்ர் செய்வது தான்.
4. அல்லாஹ்வை நாவாலும், உள்ளத்தாலும் திக்ர் செய்ய வேண்டும்.
5. திக்ர்களில் மேலானது லாயிலாஹ இல்லல்லாஹு ஆகும். அதாவது அல்லாஹ் தான் நம் தேவைகளைப் பூர்த்தி செய்கிறான் என்று உணர்வதாகும்!

37. ஷைகு, முரீது, பைஅத் என்றால் என்ன?

1. ஷைகு என்றால் வழிகாட்டி! முரீது என்றால் அவரின் மாணவர்! பைஅத் என்றால் ஒரு ஷைகிடம் மாணவராகச் சேர்வது!
2. அல்லாஹ்வை எப்போதும் நினைப்பதற்கும், அவனை அடைவதற்கும் ஒரு உண்மையான காமிலான ஷைகிடம் பைஅத் பெறுவது அவசியமாகும்.
3. அவர்கள் இறை ஞானங்களை போதித்து உள்ளத்தை தூய்மைப் படுத்துவார்கள்.

ஒழுக்கங்கள்

38. ஒரு முஸ்லிம் இன்னொரு முஸ்லிமுக்கு செய்ய வேண்டிய கடமைகள் யாவை?

1. சந்தித்தால் சலாம் சொல்ல வேண்டும்.
2. நோயாளிகளை நலம் விசாரிக்க வேண்டும்.
3. விருந்துக்கு அழைத்தால் செல்ல வேண்டும்.
4. தும்மியவர் அல்ஹம்துலில்லாஹ் என்று சொன்னால் அதைக் கேட்டவர் "யர்ஹமுகல்லாஹ்" என்று சொல்ல வேண்டும்.
5. மரணித்தவருக்கு ஜனாஜா தொழுக வேண்டும்.
6. தனது நாவாலும், கையாலும் பிறருக்குத் தொல்லை தரக் கூடாது.
7. தன்னால் முடிந்த அளவு பிறருக்கு உதவி செய்ய வேண்டும்.

39. பெற்றோர்களுக்கு செய்ய வேண்டிய கடமைகள் யாவை?


1. அவர்கள் அழைத்தால் உடனே செல்ல வேண்டும்.
2. அவர்களின் கட்டளைகளுக்குக் கட்டுப்பட வேண்டும்.
3. உடலாலும், பொருளாலும் அவர்களுக்குப் பணிவிடை செய்ய வேண்டும்.
4. அவர்கள் வருத்தப்படும் பேச்சுகளைப் பேசக் கூடாது!
5. அவர்களிடம் அன்போடும், கண்ணியத்தோடும் பேச வேண்டும்.
6. அவர்களிடம் எப்போதும் பணிவாக நடக்க வேண்டும்.
7. "ரப்பிர்ஹம்ஹுமா கமா ரப்பயானீ சகீரா" என்று அவர்களுக்காக துஆச் செய்ய வேண்டும்.

பொருள்:- இறைவா! நான் குழந்தையாக இருந்த போது என் மீது அவர்கள் எப்படி இரக்கம் காட்டினார்களோ அப்படியே நீயும் அவர்கள் மீது இரக்கம் காட்டுவாயாக!

8. அவர்கள் மரணித்து விட்டால் அவர்களுக்காக சதகா - தான தர்மங்கள் செய்ய வேண்டும். அடிக்கடி அவர்களின் கப்ருகளை ஜியாரத் செய்ய வேண்டும்.

40. ஆசிரியர்களுக்கு செய்ய வேண்டிய கடமைகள் யாவை?

1. ஆசிரியர்களுக்கு முன் பணிவுடனும் அமைதியுடனும் இருக்க வேண்டும்.
2. அவர்கள் கூறுவதை கவனமாகக் கேட்க வேண்டும்.
3. அவர்களின் கட்டளைகளை உடனே நிறைவேற்ற வேண்டும்
4. அவர்கள் திட்டினாலும் தண்டனை கொடுத்தாலும் அது நமது நன்மைக்கே! என்று நினைத்து அன்பு கொள்ள வேண்டும்.
5. அவர்களுக்காக எப்போதும் துஆ செய்ய வேண்டும்.



பகுதி - 2

மஸாயில் - மார்க்கச் சட்டங்கள்

1. **மார்க்கச் சட்டங்கள் எதிலிருந்து எடுக்கப்பட்டன?**
   1. குர்ஆன்
   2. ஹதீஸ்
   3. இஜ்மாஃ
   4. கியாஸ்

2. **குர்ஆன் என்றால் என்ன?**

1. குர்ஆன் என்பது அல்லாஹு தஆலாவுடைய பேச்சுக்களே ஆகும்.
2. நபி (ஸல்) அவர்களின் நாற்பது வயதிலிருந்து 63 வயது வரை கொஞ்சம் கொஞ்சமாக குர்ஆன் இறங்கியது.
3. அந்தந்த நேரங்களுக்குத் தேவையான விஷயங்களை அல்லாஹ் ஜிப்ரயீல் (அலை) மூலமாக நபியவர்களுக்கு இறக்கிக் கொண்டே இருந்தான்.
4. அதை ஸஹாபாக்கள் எழுதி வைத்துக் கொண்டார்கள்.
5. நபி (ஸல்) அவர்களின் மறைவுக்குப் பின் ஒன்று சேர்த்து எழுதப்பட்டது.

3. **"ஹதீஸ்" என்றால் என்ன?**

1. நபி (ஸல்) அவர்களின் சொற்களும், செயல்களும் அவர்கள் அனுமதி அளித்த விஷயங்களும் "ஹதீஸ்" எனப்படும்.
2. நபி (ஸல்) அவர்களின் காலத்திற்குப் பின்பு அவைகள் தொகுக்கப் பட்டு பல நூறு புத்தகங்களாக எழுதப்பட்டன!
3. அவற்றுள் முக்கியமானவை:-

1.	புகாரீ	2.	முஸ்லிம்
3.	திர்மிதீ	4.	அபூதாவூத்
5.	இப்னுமாஜா	6.	நசஈ

4. “இஜ்மாஃ” என்றால் என்ன?

ஒரு சட்டத்தை குர்ஆன் ஹதீஸில் நம்மால் எடுக்க முடியவில்லை என்றால் மார்க்க அறிஞர்கள் ஒன்று சேர்ந்து குர்ஆன் ஹதீஸுடைய அடிப்படையில் ஒரு முடிவு செய்வார்கள். அது “இஜ்மாஃ” எனப்படும்.

5. “கியாஸ்” என்றால் என்ன?

ஒரு சட்டத்தை குர்ஆன், ஹதீஸ், இஜ்மாஃ வில் இருந்து எடுக்க முடியவில்லை என்றால் அறிவைக் கொண்டு ஆராய வேண்டும். வேறு சட்டங்களுடன் ஒப்பிட்டுப் பார்த்து இந்த சட்டத்தை முடிவு செய்ய வேண்டும். அதற்கு “ கியாஸ்” எனப்படும்.

மத்ஹப்

6. “இமாம்கள்” என்றால் யார்? மத்ஹப் என்றால் என்ன?

குர்ஆனையும், ஹதீஸையும் ஆராய்ந்து, ஸஹாபாக்கள் தாபியீன்கள் வாழ்க்கையைப் பார்த்து அறிந்து அதன் அடிப்படையில் மார்க்க சட்டங்களை முறைப்படி தொகுத்து கொடுத்தவர்கள் இமாம்கள் ஆவார்கள்!

அவர்கள் கொடுத்த வழி முறைகளுக்கு மத்ஹப் எனப்படும்.

இமாம்கள் நான்கு பேர்!

1. இமாம் அபூஹனீபா (ரஹ்) - ஹனபீ மத்ஹப்
2. இமாம் ஷாபிஈ (ரஹ்) - ஷாபிஈ மத்ஹப்
3. இமாம் மாலிக் (ரஹ்) - மாலிக் மத்ஹப்
4. இமாம் அஹ்மத் இப்னு ஹம்பல் - (ரஹ்) - ஹம்பலி மத்ஹப்

7. மத்ஹப்களைப் பின்பற்றுவது அவசியமா?

நாம் ஒவ்வொருவரும் தனித்தனியாக குர்ஆன் ஹதீஸை ஆராய்ச்சி செய்வதற்கு அறிவும் தகுதியும் இல்லை. எனவே நான்கு மத்ஹப்களில் ஒன்றைப் கட்டாயமாகப் பின்பற்ற வேண்டும்.

நான்கு இமாம்களுக்கு பின் வாழ்ந்த தீனுடைய பெரும் பெரும் உலமாக்கள், வலிமார்கள் அனைவரும் இமாம்களைப் பின்பற்றியே வாழ்ந்தார்கள்.

8. "சுன்னத் வல் ஜமாஅத்" என்றால் என்ன?

நபி(ஸல்) அவர்களும் அவர்களின் ஸஹாபாக்களும் காட்டிய வழிமுறைகளைப் பின்பற்றி நான்கு மத்ஹப்களில் ஒன்றை ஏற்றுக் கொண்டவர்கள் சுன்னத் வல் ஜமாஅத்தைச் சேர்ந்தவர்கள். மற்ற அனைவரும் வழி கெட்டவர்கள் ஆகும்.

9. "ஸஹாபாக்கள்" என்றால் யார்?

1. நபி (ஸல்) அவர்களின் தோழர்கள் ஸஹாபாக்கள் ஆகும்.
2. அவர்களின் பெயரைக் கேட்டால் "ரலியல்லாஹு அன்ஹு" என்று சொல்ல வேண்டும்.
3. அவர்கள் அனைவரும் நேர்மையானவர்கள் - அவர்களில் யாரைப் பின்பற்றினாலும் நேர்வழி பெறலாம்.
4. அவர்களைக் குறை சொல்பவன் பெரும் பாவி ஆவான்.
5. முக்கிய ஸஹாபாக்கள்: அபூபக்கர் (ரலி), உமர் (ரலி), உஸ்மான் (ரலி), அலி (ரலி)
6. ஸஹாபாக்களின் மாணவர்கள் தாபியீன்கள் ஆகும்.

ஏவல் விலக்கல்கள்

10. இஸ்லாத்தின் ஏவல் விலக்கல்கள் எத்தனை வகைப்படும்?

1. பர்ள்
2. வாஜிப்
3. சுன்னத்
4. முஸ்தஹப்
5. ஹராம்
6. மக்ரூஹ்
7. முபாஹ்

11. "பர்ள்" என்றால் என்ன? அதன் சட்டம் என்ன?

வயது வந்த அறிவுள்ள ஒவ்வொரு முஸ்லிமும் செய்ய வேண்டிய கட்டாயக் கடமைக்கு"பர்ள்" எனப்படும்.

இது உறுதியான ஆதாரங்களைக் கொண்டு நிரூபிக்கப் பட்டதாகும்.

இதன் சட்டம்:-

1. இதை செய்தால் நன்மை கிடைக்கும்
2. இதை விடுவது பெரும் பாவமாகும்! கடும் தண்டனை கிடைக்கும்.
3. இதை மறுத்தவன் காபிர் ஆவான்!

2. பர்ள் எத்தனை வகைப்படும் ? அவை யாவை?

பர்ள் இரண்டு வகைப்படும்.

1. பர்ள் அய்ன்
2. பர்ள் கிபாயா

பர்ள் அயன் என்றால் ஒவ்வொரு மனிதனும் செய்ய வேண்டியது.

உதாரணம் :- ஐவேளைத் தொழுகை, நோன்பு, ஜும்ஆ.

பர்ள் கிபாயா என்றால் ஊரில் சிலர் செய்தால் மற்றவர்களின் கடமை நீங்கி விடும். யாருமே செய்யா விட்டால் எல்லோருக்கும் தண்டனை உண்டு.

உதாரணம் : ஜனாஜா தொழுகை

13. 'வாஜிப்' என்றால் என்ன? அதன் சட்டம் என்ன?

இது வயது வந்த அறிவுள்ள ஒவ்வொரு முஸ்லிமும் செய்ய வேண்டிய கடமையாகும்.

இது சற்று பலம் குறைந்த ஆதாரங்களைக் கொண்டு நிரூபிக்கப் பட்டதாகும். எனவே பர்ளுக்கு அடுத்த அந்தஸ்து தரப்படுகிறது.

இதன்சட்டம் :

1. இதைச் செய்வதால் நன்மை கிடைக்கும்.
2. இதை விட்டால் பாவமும், தண்டனையும் கிடைக்கும்.
3. இதை மறுத்தவன் காபிராக மாட்டான்.

14. சுன்னத் என்றால் என்ன? அதன் சட்டம் என்ன?

நபி(ஸல்) அவர்கள் தொடர்ந்து செய்த வழிமுறைக்கு சுன்னத் எனப்படும்.

உதாரணம்:- பாங்கு, இகாமத், தராவீஹ்,
பஜ்ரின் முன் சுன்னத், தாடி வைத்தல்

இதன் சட்டம்:-

1. இதைச் செய்தால் நன்மை கிடைக்கும்.
2. தகுந்த காரணமின்றி தொடர்ந்து செய்யாமல் இருந்தால் பாவம் கிடைக்கும்.
3. மறுத்தவன் காபிர் ஆகமாட்டான்.

15. "முஸ்தஹப்" என்றால் என்ன?

நபி (ஸல்) அவர்கள் சில சில நேரங்களில் செய்த வணக்கங்களும், அவர்களின் பழக்க வழக்கங்களும் "முஸ்தஹப்" எனப்படும்.

உதாரணம்:- 1. அஸரின் முன் சுன்னத்
2. வலது பக்கம் ஆரம்பித்தல்

இதன் சட்டம்:-

1. செய்தால் நன்மை கிடைக்கும்
2. விட்டால் பாவம் இல்லை

16. ஹறாம் என்றால் என்ன? அதன் சட்டம் என்ன?

ஒரு முஸ்லிம் செய்ய கூடாது என்று கண்டிப்பாக தடுக்கப்பட்ட காரியங்கள் ஹறாம் எனப்படும்.

இது உறுதியான ஆதாரங்களைக் கொண்டு நிரூபிக்கப் பட்டதாகும்.

உதாரணம்:- மது, பன்றி, செத்த ஆடு, இரத்தம் போன்றவைகளைச் சாப்பிடுவது, கொலை செய்வது.

இதன் சட்டம்:-

1. இதை செய்வது பெரும் பாவமாகும். கடும் தண்டனை கிடைக்கும்.
2. இதை மறுத்தவன் காபிர் ஆவான்.

17. மக்ரூஹ் என்றால் என்ன? அதன் சட்டம் என்ன?

மார்க்கத்தில் வெறுக்கப்பட்ட காரியங்களுக்கு மக்ரூஹ் எனப்படும்.

உதாரணம் : கடமைகளை தாமதம் செய்தல்.

இதன் சட்டம்:

1. இதைச் செய்தால் சிறிய பாவம் ஆகும்.
2. மறுத்தால் காபிர் ஆக மாட்டான்

18 . முபாஹ் என்றால் என்ன?

செய்வதற்கு ஆகுமான காரியங்கள் "முபாஹ், ஜாயிஜ்" எனப்படும்.

உதாரணம் ; 1. ஆட்டுக் கறி சாப்பிடுதல்

2. பழச்சாறு குடிக்குதல்

ஒளு

19. ஒளுவின் பர்ளுகள் எத்தனை?

ஒளுவின் பர்ளுகள்: 4

1. முகம் கழுவுதல்
2. இரு கைகளையும் முழுங்கை மூட்டு வரை கழுவுதல்
3. தலையில் கால் பங்கு மஸஹு செய்தல் (தடவுதல்)
4. இரு கால்களையும் கரண்டை வரை கழுவுதல்

20. ஒளு இன்றி செய்யக் கூடாத காரியங்கள் யாவை?

1. ஒளு இன்றி தொழக் கூடாது.
2. ஸஜ்தா திலாவத் செய்யக் கூடாது.
3. குர்ஆனை தொடக் கூடாது. (தொடாமல் ஓதலாம்)
4. கஃபாவை தவாப் சுற்றக் கூடாது.

21. ஒளுவை முறிப்பவை யாவை?

1. முன், பின் துவாரங்களில் இருந்து ஏதேனும் ஒன்று வெளியாகுதல்.
2. உடலில் ஏதாவது ஒரு இடத்தில் இரத்தம், சீழ் வந்து வடிதல்
3. வாய் நிறைய வாந்தி எடுத்தல்
4. படுத்து அல்லது சாய்ந்து உட்கார்ந்து தூங்குதல்
5. மயக்கம் ஆகுதல், போதை ஆகுதல், பைத்தியம் பிடித்தல்.
6. தொழுகையில் சப்தமிட்டு சிரிக்குதல்

22. குளிப்பின் பர்ளுகள் யாவை?

குளிப்பின் பர்ளுகள்: 3

1. வாய் கொப்பளித்தல்
2. மூக்கில் தண்ணீர் விட்டு கழுவுதல்
3. உடல் முழுவதும் கழுவுதல்

23. தயம்மும் – ன் பர்ளுகள் எத்தனை?

தயம்முமின் பர்ளுகள்: 3

1. தயம்மும் செய்கிறேன் என்று நிய்யத் செய்தல்
2. சுத்தமான மண்ணில் இரு கைகளையும் அடித்து முகத்தில் தடவுதல்
3. மீண்டும் அடித்து இரு கைகளிலும் முழங்கைவரை தடவுதல்

தொழுகை

24. தொழுகையின் வெளி பர்ளுகள் எத்தனை?

தொழுகையின் வெளி பர்ளுகள்: 7

1. உடல் சுத்தமாக இருத்தல்
2. உடை சுத்தமாக இருத்தல்
3. தொழுமிடம் சுத்தமாக இருத்தல்
4. உடலை மறைத்தல்
   (ஆண்கள் தொப்புளில் இருந்து முட்டுக் கால் வரை மறைப்பது கடமை. பெண்கள் முகம், முன்னங்கை, பாதம் தவிர உடல் முழுவதும் மறைப்பது கடமை.)
5. நேரத்தை அறிதல்
6. கிப்லாவை முன்னோக்குதல்
7. நிய்யத்து வைத்தல்

25. தொழுகையின் உள் பர்ளுகள் எத்தனை?

தொழுகையின் உள் பர்ளுகள்: 6

1. தக்பீர் தஹ்ரீமா கட்டுவது
2. நிலை நிற்பது
3. கிராஅத் ஓதுவது
4. ருகூஃ செய்வது
5. ஸஜ்தா செய்வது
6. கடைசி இருப்பு இருப்பது

26. எந்தெந்த நேரங்களில் தொழுவது கூடாது?

1. சூரியன் உதிக்கும் நேரம் (உதயம்)
2. சூரியன் உச்சியில் இருக்கும் நேரம் (உச்சம்)
3. சூரியன் மறையும் நேரம் (அஸ்தமம்)

27. தொழுகையின் வாஜிபுகள் யாவை?

1. சூரா பாத்திஹா ஓதுதல்
2. இணைப்பு சூரா ஓதுதல்
3. ருகூவில் இருந்து எழுந்து நிற்குதல்
4. இரண்டு ஸஜ்தா செய்தல்
5. முந்திய இருப்பு இருக்குதல்
6. அத்தஹிய்யாத்து ஓதுதல்

இன்னும் பல வாஜிபுகள் உள்ளன!

28. தொழுகையில் பர்ள், வாஜிபை விட்டால் சட்டம் என்ன?

பர்ளை விட்டால் தொழுகை கூடாது. திருப்பித் தொழ வேண்டும். வாஜிபை விட்டால் ஸஜ்தா ஸஹ்வு செய்ய வேண்டும்.

29. தொழுகையை முறிப்பவை யாவை?

1. சாப்பிடுதல், குடிக்குதல்
2. பேசுதல், சிரித்தல்
3. கிப்லாவை விட்டு நெஞ்சை திருப்புதல்
4. அதிகமான செயல்களைச் செய்தல்

30. "களா" என்றால் என்ன?

பர்ளான தொழுகையை அதற்குரிய நேரத்தில் தொழாமல் வேண்டுமென்றோ அல்லது மறதியாகவோ விட்டு விட்டால் அதைக் களாவாகத் தொழுவது கடமையாகும்.

பர்ள் வாஜிப்களைக் களா செய்ய வேண்டும். சுன்னத், நபில் களில் களா இல்லை.

31. "கஸர் தொழுகை" என்றால் என்ன?

1. முஸாபர் (பயணி) 4 ரகஅத் உடைய பர்ள் தொழுகைகளை இரண்டு ரகஅத்தாகத் தொழுவார். இது "கஸர் தொழுகை" எனப்படும்.

2. தன் ஊரில் இருந்து 77 கி.மீ மேல் செல்ல நாடி புறப்பட்டால் அவர் முஸாபிர் ஆவார். மீண்டும் ஊருக்குத் திரும்பி வரும் வரை 2 ரகஅத் தொழுவார்.

3. வேறு ஊரில் 15 நாட்கள் அல்லது அதை விட அதிகமாகத் தங்கினால் 4 ரகஅத் தொழ வேண்டும்.

நோன்பு

32. நோன்பின் வகைகள் யாவை?

1. **பர்ள்:-** ரமலான் நோன்பும், ரமலான் நோன்புடைய களாவும் "பர்ள்" ஆகும்.
2. **வாஜிப்:-** நேர்ச்சை நோன்பும், நபிலான நோன்பை முறித்து விட்டால் அதை களா செய்வதும் "வாஜிப்" ஆகும்.
3. **சுன்னத்:-** முஹர்ரம் 9,10 பிறைகள் (ஆஷூரா) துல்ஹஜ் பிறை 9 (அரபா) ஷஅபான் பிறை 15 (பராஅத்) ஒவ்வொரு மாதமும் 13,14, 15 பிறைகள், ஷவ்வால் மாதம் 6 நோன்புகள் இவையெல்லாம் சுன்னத்தான நோன்புகளாகும்.
4. **ஹராம்:-** இரண்டு பெரு நாட்களிலும் துல்ஹஜ் 11,12,13 பிறை களிலும் நோன்பு வைப்பது ஹராமாகும்.
5. **நபில்:-** நபில் எப்போதும் வைக்கலாம்!

33. நோன்பை முறிப்பவை யாவை?

1. சாப்பிடுதல், குடிக்குதல்
2. புகை பிடித்தல்
3. மூக்கில், காதில் மருந்து விடுதல்
4. மூக்குப் பொடி போடுதல்

இவை போன்ற செயல்களை வேண்டுமென்றே செய்தால் நோன்பு முறியும். மறதியாக செய்தால் முறியாது.

34. "கப்பாரா" என்றால் என்ன?

ரமலான் மாதம் நோன்பு வைத்து அதை பாதியிலேயே வேண்டு மென்றே முறித்து விட்டால் அந்த நோன்பை களா செய்து, கப்பாரா (பரிகாரமும்) கொடுக்க வேண்டும்.

கப்பாரா:- 1. ஒரு அடிமையை உரிமைவிடுதல்
2. அல்லது தொடர்ந்து 60 நோன்பு வைத்தல்
3. அல்லது 60 ஏழைகளுக்கு உணவு அளித்தல்.

ஜகாத்

35. ஜகாதின் சட்டம் என்ன?

1. ஜகாதின் குறைந்த பட்ச அளவு (நிசாப்):- 87 ½ கிராம் தங்கம் அல்லது 612 கிராம் வெள்ளி ஆகும்.
2. இந்த அளவு அல்லது இதைவிட அதிகமான மதிப்புடைய தங்கம், வெள்ளி, பணம், வியாபாரப் பொருட்கள் ஒருவரிடம் ஒருவருடம் இருந்தால் அதில் நாற்பதில் ஒரு பங்கை ஏழைகளுக்கு ஜகாத்தாக கொடுக்க வேண்டும்.
3. வீடு, நிலம், வாகனங்கள், வீட்டுச் சாமான்களில் ஜகாத்து கடமையில்லை!
4. ஆடு, மாடு, ஒட்டகம், விவசாய உற்பத்தி இவைகளில் ஒரு குறிப்பிட்ட அளவு ஜகாத்து கடமையாகும்.

ஹஜ்

36. ஹஜ்ஜின் முறை என்ன?

1. ஹஜ்ஜின் நிய்யத்துடன் இஹ்ராம் அணிய வேண்டும்.
2. துல்ஹஜ் பிறை 9 அன்று பகலில் மக்காவுக்கு அருகில் உள்ள அரபா வில் தங்க வேண்டும்.
3. அன்று இரவு முஜ்தலிபாவில் தங்க வேண்டும்.
4. துல்ஹஜ் பிறை 10 ல் மினாவுக்கு வந்து ஷைத்தானுக்குக் கல்லெறிந்து, ஆடு அறுத்து, தனது தலை முடியை வெட்டிக் கொள்ள வேண்டும்.
5. அன்றே கஃபதுல்லாவுக்குச் சென்று தவாபும், "சஃ" யும் செய்து மீண்டும் மினாவுக்கு வந்து 3 நாட்கள் தங்க வேண்டும்.

மஹ்றம்

37. "மஹ்றம்" என்றால் என்ன?

மஹ்றம் என்றால் திருமணம் செய்ய தடுக்கப்பட்டவர்கள். ஒரு ஆணுக்கு மஹ்றம்கள்:-

1. தாய், பாட்டி
2. சகோதரிகள், சகோதர சகோதரிகளின் பிள்ளைகள்
3. தாயின் சகோதரிகள்
4. தந்தையின் சகோதரிகள்
5. மகள், பேத்தி
6. பால் குடி உறவினர்கள்

இவர்களை திருமணம் செய்வது தடுக்கப்பட்டதாகும். இவர்கள் முன் நிற்கலாம். இவர்கள் அல்லாத மற்ற பெண்களைப் பார்ப்பதும் கூடாது.

38. ஒரு பெண்ணுக்கு மஹ்றம்கள் யார்?

1. தந்தை, பாட்டனார்
2. சகோதரர்கள், சகோதர சகோதரிகளின்பிள்ளைகள்.
3. தாயின் சகோதரர்கள்
4. தந்தையின் சகோதரர்கள்
5. மகன், பேரன்
6. பால்குடி உறவினர்கள்

இவர்களைத் திருமணம் செய்வது ஒரு பெண்ணுக்கு தடுக்கப்பட்டதாகும். இவர்கள் முன் நிற்கலாம். இவர்கள் அல்லாத பிற ஆண்களை பார்ப்பது கூடாது.

இஸ்லாமிய மாதங்கள்

39. இஸ்லாமிய மாதங்கள் யாவை?


இஸ்லாமிய மாதங்கள் : 12

1.	முஹர்ரம்	2.	ஸபர்
3.	ரபீவுல் அவ்வல்	4.	ரபீவுல் ஆகிர்
5.	ஜமாதுல் அவ்வல்	6.	ஜமாதுல் ஆகிர்
7.	ரஜப்	8.	ஷஃபான்
9.	ரமலான்	10.	ஷவ்வால்
11.	துல்கஃதா	12.	துல்ஹஜ்

தொழுகையின் ரகஅத்துகள்

40. தொழுகையின் ரகஅத்துகள் எத்தனை?

	முன்சுன்னத்	பர்ள்	பின்சுன்னத்
பஜர்	2	2	
லுஹர்	4	4	2
அஸர்		4	
மஃரிப்		3	2
இஷா		4	2+ வித்ர் வாஜிப்3
ஜும்ஆ	4	2	4+2



பகுதி - 3

மனனம் செய்ய வேண்டியவை

கலிமாக்கள்:

முதலாம் கலிமா - தய்யிபு:-

لَآ اِلٰهَ اِلَّا اللّٰهُ مُحَمَّدٌ رَّسُوْلُ اللّٰهِ

இரண்டாம் கலிமா - ஷஹாதத்:-

اَشْهَدُ اَنْ لَّآ اِلٰهَ اِلَّا اللّٰهُ وَحْدَهٗ لَا شَرِيْكَ
لَهٗ وَاَشْهَدُ اَنَّ مُحَمَّدًا عَبْدُهٗ وَرَسُوْلُهٗ

மூன்றாம் கலிமா - தம்ஜீது:-

سُبْحَانَ اللّٰهِ وَالْحَمْدُ لِلّٰهِ وَلَآ اِلٰهَ اِلَّا اللّٰهُ
وَاللّٰهُ اَكْبَرُ وَلَا حَوْلَ وَلَا قُوَّةَ اِلَّا بِاللّٰهِ
الْعَلِيِّ الْعَظِيْمِ

நான்காம் கலிமா - தவ்ஹீது:-

لَآ اِلٰهَ اِلَّا اللّٰهُ وَحْدَهٗ لَا شَرِيْكَ لَهٗ لَهُ الْمُلْكُ
وَلَهُ الْحَمْدُ يُحْيِيْ وَيُمِيْتُ بِيَدِهِ الْخَيْرُ وَهُوَ
عَلٰى كُلِّ شَيْءٍ قَدِيْرٌ

ஐந்தாம் கலிமா – ரத்துல் குப்ர்:-

اَللّٰهُمَّ اِنِّيْٓ اَعُوْذُ بِكَ مِنْ اَنْ اُشْرِكَ بِكَ
شَيْئًا وَّ اَنَا اَعْلَمُ وَاَسْتَغْفِرُكَ لِمَا لَآ اَعْلَمُ
اِنَّكَ اَنْتَ عَلَّامُ الْغُيُوْبِ ـ تُبْتُ عَنْهُ
وَتَبَرَّأْتُ عَنْ كُلِّ دِيْنٍ سِوٰى دِيْنِ الْاِسْلَامِ
وَاَسْلَمْتُ وَاٰمَنْتُ وَ اَقُوْلُ لَآ اِلٰهَ اِلَّا اللّٰهُ
مُحَمَّدٌ رَّسُوْلُ اللّٰهِ

தொழுகையில் ஓத வேண்டியவை:

சனா:

سُبْحَانَكَ اللّٰهُمَّ وَبِحَمْدِكَ وَتَبَارَكَ اسْمُكَ
وَتَعَالٰى جَدُّكَ وَلَآ اِلٰهَ غَيْرُكَ

அத்தஹிய்யாத்து:

اَلتَّحِيَّاتُ لِلّٰهِ وَالصَّلَوٰتُ وَالطَّيِّبَاتُ اَلسَّلَامُ
عَلَيْكَ اَيُّهَا النَّبِيُّ وَرَحْمَةُ اللّٰهِ وَبَرَكَاتُهُ اَلسَّلَامُ
عَلَيْنَا وَعَلٰى عِبَادِ اللّٰهِ الصّٰلِحِيْنَ اَشْهَدُ اَنْ لَّآ
اِلٰهَ اِلَّا اللّٰهُ وَاَشْهَدُ اَنَّ مُحَمَّدًا عَبْدُهٗ وَرَسُوْلُهٗ

சலவாத்:

اَللّٰهُمَّ صَلِّ عَلٰى مُحَمَّدٍ وَّعَلٰٓى اٰلِ مُحَمَّدٍ كَمَا صَلَّيْتَ
عَلٰٓى اِبْرَاهِيْمَ وَعَلٰٓى اٰلِ اِبْرَاهِيْمَ اِنَّكَ حَمِيْدٌ مَّجِيْدٌ
اَللّٰهُمَّ بَارِكْ عَلٰى مُحَمَّدٍ وَّعَلٰى اٰلِ مُحَمَّدٍ كَمَا بَارَكْتَ
عَلٰٓى اِبْرَاهِيْمَ وَعَلٰٓى اٰلِ اِبْرَاهِيْمَ اِنَّكَ حَمِيْدٌ مَّجِيْدٌ

துஆயே மஃசூரா:

اَللّٰهُمَّ اغْفِرْلِيْ وَلِوَالِدَيَّ وَلِاُسْتَاذِيْ وَلِجَمِيْعِ
الْمُؤْمِنِيْنَ وَالْمُؤْمِنَاتِ وَالْمُسْلِمِيْنَ وَالْمُسْلِمَاتِ
اَلْاَحْيَآءِ مِنْهُمْ وَالْاَمْوَاتِ اِنَّكَ مُجِيْبُ الدَّعْوَاتِ
بِرَحْمَتِكَ يَآ اَرْحَمَ الرَّاحِمِيْنَ ٥

குனூத் (ஹனபி) :

اَللّٰهُمَّ اِنَّا نَسْتَعِيْنُكَ وَنَسْتَغْفِرُكَ وَنُؤْمِنُ بِكَ
وَنَتَوَكَّلُ عَلَيْكَ وَنُثْنِيْ عَلَيْكَ الْخَيْرَ كُلَّهٗ وَنَشْكُرُكَ
وَلَا نَكْفُرُكَ وَنَخْلَعُ وَنَتْرُكُ مَنْ يَّفْجُرُكَ اَللّٰهُمَّ
اِيَّاكَ نَعْبُدُ وَلَكَ نُصَلِّىْ وَنَسْجُدُ وَاِلَيْكَ نَسْعٰى
وَنَحْفِدُ وَنَرْجُوْ رَحْمَتَكَ وَنَخْشٰى عَذَابَكَ اِنَّ
عَذَابَكَ الْجِدَّ بِالْكُفَّارِ مُلْحِقٌ

குனூத் (ஷாபி) :

اَللّٰهُمَّ اهْدِنِيْ فِيْمَنْ هَدَيْتَ وَعَافِنِيْ فِيْمَنْ عَافَيْتَ
وَتَوَلَّنِيْ فِيْمَنْ تَوَلَّيْتَ وَبَارِكْ لِيْ فِيْمَا
اَعْطَيْتَ وَقِنِيْ شَرَّ مَا قَضَيْتَ فَاِنَّكَ تَقْضِيْ وَلَا يُقْضٰى
عَلَيْكَ فَاِنَّهٗ لَا يَذِلُّ مَنْ وَّالَيْتَ وَلَا يَعِزُّ مَنْ
عَادَيْتَ تَبَارَكْتَ رَبَّنَا وَتَعَالَيْتَ فَلَكَ الْحَمْدُ
عَلٰى مَا قَضَيْتَ اَسْتَغْفِرُكَ وَاَتُوْبُ اِلَيْكَ
وَصَلَّى اللهُ عَلَى النَّبِيِّ الْاُمِّيِّ وَعَلٰٓى اٰلِهٖ وَصَحْبِهٖ
وَسَلَّمْ رَبِّ اغْفِرْ وَارْحَمْ وَاَنْتَ خَيْرُ الرَّاحِمِيْنَ ط

பாங்கு துஆ:

اَللّٰهُمَّ رَبَّ هٰذِهِ الدَّعْوَةِ التَّآمَّةِ وَالصَّلٰوةِ
الْقَآئِمَةِ اٰتِ سَيِّدَنَا مُحَمَّدَنِ الْوَسِيْلَةَ
وَالْفَضِيْلَةَ وَالدَّرَجَةَ الرَّفِيْعَةَ الْعَالِيَةَ
الشَّرِيْفَةَ وَابْعَثْهُ مَقَامًا مَّحْمُوْدَنِ الَّذِيْ
وَعَدْتَّهٗ وَارْزُقْنَا شَفَاعَتَهٗ وَاَوْرِدْنَا
حَوْضَهٗ يَوْمَ الْقِيٰمَةِ اِنَّكَ لَا تُخْلِفُ الْمِيْعَادَ ط

ஸுன்னத்தான துஆக்கள்

சாப்பிடும் முன்:

بِسْمِ اللّٰهِ وَعَلٰى بَرَكَةِ اللّٰهِ

சாப்பிட்ட பின்:

اَلْحَمْدُ لِلّٰهِ الَّذِىْ اَطْعَمَنَا وَسَقَانَا
وَجَعَلَنَا مِنَ الْمُسْلِمِيْنَ ط

கழிவறைக்கு செல்லும் முன்:

اَللّٰهُمَّ اِنِّىْ اَعُوْذُ بِكَ مِنَ الْخُبُثِ وَالْخَبَآئِثِ

கழிவறையிலிருந்து வெளியேறும் போது:

غُفْرَانَكَ اَلْحَمْدُ لِلّٰهِ الَّذِىْ اَذْهَبَ عَنِّىْ
الْاَذٰى وَعَافَانِىْ

வீட்டிற்குள் நுழையும் போது:

اَللّٰهُمَّ اِنِّىْ اَسْئَلُكَ خَيْرَ الْمَوْلَجِ وَخَيْرَ
الْمَخْرَجِ بِسْمِ اللّٰهِ وَلَجْنَا بِسْمِ اللّٰهِ خَرَجْنَا وَعَلَى
اللّٰهِ رَبِّنَا تَوَكَّلْنَا ؕ

வீட்டிலிருந்து வெளியேறும் போது:

بِسْمِ اللهِ تَوَكَّلْتُ عَلَى اللهِ لَا حَوْلَ وَلَا قُوَّةَ
اِلَّا بِاللهِ

தூங்கும் முன் :

اَللّٰهُمَّ بِاسْمِكَ اَمُوْتُ وَاَحْيٰي

தூங்கி எழுந்த பின்:

اَلْحَمْدُ لِلّٰهِ الَّذِىْ اَحْيَانَا بَعْدَ مَا اَمَاتَنَا وَاِلَيْهِ
النُّشُوْرُ

மஸ்ஜிதுக்குள் நுழையும் போது:

اَللّٰهُمَّ افْتَحْ لِيْ اَبْوَابَ رَحْمَتِكَ

மஸ்ஜிதை விட்டு வெளியேறும் போது:

اَللّٰهُمَّ اِنِّيْٓ اَسْئَلُكَ مِنْ فَضْلِكَ وَ رَحْمَتِكَ

ஆடை அணியும் போது:

اَلْحَمْدُ لِلّٰهِ الَّذِىْ كَسَانِىْ هٰذَا وَرَزَقَنِيْهِ مِنْ غَيْرِ
حَوْلٍ مِّنِّىْ وَلَا قُوَّةٍ

வாகனத்தில் ஏறும் போது:

سُبْحَانَ الَّذِيْ سَخَّرَ لَنَا هٰذَا وَمَا كُنَّا لَهٗ
مُقْرِنِيْنَ وَاِنَّا اِلٰى رَبِّنَا لَمُنْقَلِبُوْنَ ؕ

காலையும், மாலையும் ஓதும் துஆ:

اَعُوْذُ بِكَلِمَاتِ اللّٰهِ التَّآمَّاتِ كُلِّهَا
مِنْ شَرِّ مَا خَلَقَ ؕ
بِسْمِ اللّٰهِ الَّذِىْ لَا يَضُرُّ مَعَ اسْمِهٖ شَيْئٌ فِى
الْاَرْضِ وَلَا فِى السَّمَآءِ وَهُوَ السَّمِيْعُ الْعَلِيْمُ

பகுதி - 4

ஹதீஸ்கள்

1. தூய எண்ணம்

اِنَّمَا الْاَعْمَالُ بِالنِّيَّاتِ

நிச்சயமாக செயல்கள் அனைத்தும் எண்ணங்களைக் கொண்டே பலன் தரும். (புகாரி)

2. கலிமாவைப் பற்றி

مَنْ قَالَ لاَ اِلٰهَ اِلاَّ اللّٰهُ مُخْلِصًا دَخَلَ الْجَنَّةَ

யார் லாயிலாஹ இல்லல்லாஹ் என்று மனத் தூய்மையுடன் சொன்னாரோ அவர் சுவனத்தில் நுழைவார். (தப்ரானி)

3. தொழுகையைப் பற்றி

اَلصَّلٰوةُ مِفْتَاحُ الْجَنَّةِ

தொழுகை சுவனத்தின் திறவுகோல். (திர்மிதி)

4. துஆவைப் பற்றி

اَلدُّعَاءُ مُخُّ الْعِبَادَةِ

துஆவாகிறது வணக்கங்களின் மூளையாகும். (திர்மிதி)

5. நோன்பைப் பற்றி

اَلصَّوْمُ جُنَّةٌ

நோன்பாகிறது கேடயமாயிருக்கும். (முஸ்லிம்)

6. நற்குணத்தைப் பற்றி

بُعِثْتُ لِاُتَمِّمَ حُسْنَ الْاَخْلَاقِ

நான் நற்குணங்களை மக்களிடம் பூர்த்தியாக்கவே அனுப்பப் பட்டுள்ளேன். (முஅத்தா மாலிக்)

7. பொறுமையைப் பற்றி

اَلصَّبْرُ نِصْفُ الْاِيْمَانِ

பொறுமையாகிறது ஈமானில் பாதியாயிருக்கும். (மிஷ்காத்)

8. தீனைப் பற்றி

اَلدِّيْنُ اَلنَّصِيْحَةُ

தீனாகிறது பிறர் நலம் நாடுவதாயிருக்கும். (முஸ்லிம்)

9. வெட்கத்தைப் பற்றி

اَلْحَيَاءُ شُعْبَةٌ مِّنَ الْاِيْمَانِ

வெட்கமாகிறது ஈமானில் ஒரு பகுதியாகும். (புகாரி)

10. முஸ்லிம் யார் ?

اَلْمُسْلِمُ مَنْ سَلِمَ الْمُسْلِمُوْنَ مِنْ لِّسَانِهِ وَيَدِهِ

தன் நாவாலும், கையாலும் பிற முஸ்லிம்களுக்கு தீங்கு செய்யாதவனே உண்மை முஸ்லிமாகும். (திர்மிதி)

11. உங்களில் சிறந்தவர் யார்?

خَيْرُكُمْ مَنْ تَعَلَّمَ الْقُرْآنَ وَعَلَّمَهُ

உங்களில் மிகச் சிறந்தவர் குர்ஆனைத் தானும் கற்று பிறருக்கும் கற்றுத் தருபவராகும். (புகாரி)

12. அமல்களில் சிறந்தது எது?

اَحَبُّ الْاَعْمَالِ اِلَى اللّٰهِ اَدْوَمُهَا وَاِنْ قَلَّ

தொடர்ந்து செய்யும் நற்காரியங்கள் அது குறைவாக இருப்பினும் அல்லாஹ்வுக்கு மிகப் பிரியமானதாயிருக்கும். (புகாரி)

13. திக்ரில் மேலானது

اَفْضَلُ الذِّكْرِ لاَ اِلٰهَ اِلاَّ اللّٰهُ وَاَفْضَلُ الدُّعَاءِ
اَلْحَمْدُ لِلّٰهِ

திக்ரில் மேலானது லாயிலாஹ இல்லல்லாஹ், துஆவில் மேலானது அல்ஹம்து லில்லாஹ். (திர்மிதி)

14. ஸலவாத்தைப் பற்றி

مَنْ صَلّٰى عَلَيَّ وَاحِدَةً صَلَّى اللّٰهُ عَلَيْهِ عَشْرًا

யார் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் மீது ஒரு ஸலவாத்து சொல்வாரோ அல்லாஹ் அவர் மீது பத்து கருணைகளைப் பொழிகிறான். (முஸ்லிம்)

15. மௌனத்தைப் பற்றி

مَنْ صَمَتَ نَجَا

மௌனத்தைக் கடைபிடிப்பவன் வெற்றி பெறுவான். (திர்மிதி)

16. ஒற்றுமையைப் பற்றி

يَدُ اللّٰهِ عَلَى الْجَمَاعَةِ

ஒன்றுபட்ட கூட்டத்தினர் மீது அல்லாஹ்வின் உதவி இருக்கிறது.
(திர்மிதி)

17. உலக ஆசையைப் பற்றி

حُبُّ الدُّنْيَا رَأْسُ كُلِّ خَطِيْئَةٍ

உலக ஆசையே பாவங்கள் அனைத்துக்கும் தலையானது.
(பைஹகீ)

18. பணிவைப் பற்றி

مَنْ تَوَاضَعَ لِلّٰهِ رَفَعَهُ اللّٰهُ وَمَنْ تَكَبَّرَ
وَضَعَهُ اللّٰهُ

அல்லாஹ்வுக்காக மக்களிடம் பணிந்து நடப்பவரை அல்லாஹ் உயர்த்துகிறான். பெருமை அடிப்பவரை அல்லாஹ் தாழ்த்துகிறான்.
(பைஹகீ)

19. நன்றி செய்தல்

مَنْ لَمْ يَشْكُرِ النَّاسَ لَمْ يَشْكُرِ اللّٰهَ

மக்களுக்கு நன்றி செலுத்தாதவன் அல்லாஹ்வுக்கு நன்றி செலுத்தியவனாக ஆக மாட்டான். (அஹ்மத்)

20. உறவை முறித்தல்

لاَ يَدْخُلُ الْجَنَّةَ قَاطِعٌ

உறவை துண்டிப்பவன் சுவனம் நுழைய மாட்டான். (புகாரி)

21. ஸலாம் சொல்லுவது

اَفْشُوا السَّلاَمَ بَيْنَكُمْ

உங்களுக்கிடையில் ஸலாமைப் பரப்புங்கள். (முஸ்லிம்)

22. தந்தையைப் பற்றி

رِضَى الرَّبِّ فِىْ رِضَى الْوَالِدِ

இறைவனின் பொருத்தம் தந்தையின் பொருத்தத்தில் இருக்கிறது. (திர்மிதி)

23. தாயைப் பற்றி

اَلْجَنَّةُ تَحْتَ اَقْدَامِ اُمَّهَاتِكُمْ

சுவர்க்கம் தாய்மார்களின் பாதங்களுக்குக் கீழே இருக்கிறது. (மிஷ்காத்)

24. நிதானத்தைப் பற்றி

اَلْاَنَاةُ مِنَ اللّٰهِ وَالْعَجْلَةُ مِنَ الشَّيْطَانِ

நிதானம் அல்லாஹ்வின் புறத்திலிருந்து உள்ளது. அவசரப்படுதல் ஷைத்தானின் புறத்திலிருந்து உள்ளது. (திர்மிதி)

25. அநீதியைப் பற்றி

اَلظُّلْمُ ظُلُمَاتٌ يَوْمِ الْقِيَامَةِ

அநீதி செய்வது மறுமை நாளின் இருளாயிருக்கும். (புகாரி)

26. தௌபாவைப் பற்றி

اَلتَّائِبُ مِنَ الذَّنْبِ كَمَنْ لاَ ذَنْبَ لَهُ

பாவத்திலிருந்து திருந்தி மன்னிப்புக் கேட்பவன் பாவமற்றவனைப் போன்றே ஆவான். (இப்னு மாஜா)

27. கல்வியைப் பற்றி

طَلَبُ الْعِلْمِ فَرِيْضَةٌ عَلى كُلِّ مُسْلِمٍ

கல்வியைத் தேடுவது ஒவ்வொரு முஸ்லிமின் மீதும் கடமையாகும். (இப்னு மாஜா)

28. அறிவாளி யார்?

اَلْكَيِّسُ مَنْ دَانَ نَفْسَهُ وَعَملَ لِمَا
بَعْدَ الْمَوْتِ

அறிவாளி என்பவன் தன் மனதை கட்டுப்படுத்துபவனும், மறுமைக்காக அமல் செய்பவனுமாகும். (திர்மிதி)

29. கருணையைப் பற்றி

لاَ يَرْحَمُ اللّٰهُ مَنْ لاَ يَرْحَمُ النَّاسَ

மக்களிடம் கருணை காட்டாதவன் மீது அல்லாஹ்வும் கருணை காட்டமாட்டான். (புகாரி)

30. வாழ்க்கை முறை

خَيْرُ الْهَدْيِ هَدْيُ مُحَمَّدٍ (صلّى)

வாழ்க்கை வழிமுறைகளில் மேலானது முஹம்மத் (ஸல்) அவர்களின் வழிமுறையாகும். (முஸ்லிம்)

31. போதைப் பொருளைப் பற்றி

كُلُّ مُسْكِرٍ حَرَامٌ

போதை உண்டாக்கும் பொருட்கள் அனைத்தும் தடுக்கப்பட்டதாகும். (முஸ்லிம்)

32. புறம் கூறுவது பற்றி

لاَ يَدْخُلُ الْجَنَّةَ نَمَّامٌ

புறம் பேசுபவன் சுவனம் செல்லமாட்டான். (முஸ்லிம்)

33. நல்லோரை நேசித்தல்

اَلْمَرْءُ مَعَ مَنْ اَحَبَّ

ஒரு மனிதன் யாரை நேசிக்கிறானோ அவரோடு மறுமையில் இருப்பான். (புகாரி)

34. தாடி, மீசையைப் பற்றி

خَالِفُوا الْمُشْرِكِيْنَ اَوْفِرُوا اللِّحْيَ
وَاَحْفُوا الشَّوَارِبَ

முஷ்ரிக்குகளுக்கு மாறு செய்யுங்கள். தாடியை வளருங்கள். மீசையை நன்றாக வெட்டிக் கொள்ளுங்கள். (புகாரி)

35. சிறந்த இடம்

اَحَبُّ الْبِلَادِ اِلَى اللّٰهِ مَسَاجِدُهَا وَاَبْغَضُ
الْبِلَادِ اِلَى اللّٰهِ اَسْوَاقُهَا

ஒரு ஊரில் உள்ள இடங்களில் அல்லாஹ்வுக்கு பிரியமானது மஸ்ஜித்களாகும். வெறுப்பானது கடைத்தெருக்களாகும். (முஸ்லிம்)

36. பொறுப்புகளைப் பற்றி

كُلُّكُمْ رَاعٍ وَكُلُّكُمْ مَسْئُوْلٌ عَنْ رَعِيَّتِهِ

உங்களில் ஒவ்வொருவர்களும் பொறுப்பாளர்களே. தன் பொறுப்பில் உள்ளவர்களைப் பற்றி மறுமையில் விசாரிக்கப்படுவீர்கள். (புகாரி)

37. வீண் வேலைகளை விடுதல்

مِنْ حُسْنِ اِسْلَامِ الْمَرْءِ تَرْكُهُ مَالَا يَعْنِيْهِ

தனக்குத் தேவையற்ற விஷயங்களை விடுபவன் தான் நல்ல முஸ்லிமாவான். (அஹ்மத்)

38. ஹதீஸ்களைப் பரப்புதல்

بَلِّغُوْا عَنِّىْ وَلَوْ آيَةٌ

நபி (ஸல்) அவர்கள் சொன்ன விஷயம் சிறிதாக இருப்பினும் அதை மக்களுக்கு எத்தி வைய்யுங்கள். (புகாரி)

39. அல்லாஹ்வின் நேசம் கிடைக்க

اِزْهَدْ فِى الدُّنْيَا يُحِبُّكَ اللّٰهُ وَازْهَدْ فِيْمَا عِنْدَ النَّاسِ يُحِبُّكَ النَّاسُ

உலகை ஆசைப்படாதே! அல்லாஹ் உன்னை நேசிப்பான். மக்களிடம் உள்ளதை ஆசைப்படாதே! மக்கள் உன்னை நேசிப்பார்கள். (திர்மிதி)

40. பகைமை கொள்ளுதல்

لاَ يَحِلُّ لِمُسْلِمٍ اَنْ يَّهْجُرَ اَخَاهُ فَوْقَ ثَلثٍ

ஒரு முஸ்லிம் தன் சகோதர முஸ்லிமுடன் மூன்று நாட்களுக்கு மேல் வெறுப்புடன் பேசாதிருத்தல் தடுக்கப்பட்டதாகும். (அஹ்மத்)

41. நபிகளின் நேசம்

لاَ يُؤْمِنُ اَحَدُكُمْ حَتّٰى اَكُوْنَ اَحَبَّ اِلَيْهِ مِنْ وَالِدِهِ وَوَلَدِهِ وَالنَّاسِ اَجْمَعِيْنَ

நபி (ஸல்) அவர்களை தன் தந்தையை விட, பிள்ளைகளை விட, மற்றும் மக்கள் அனைவரையும் விட அதிகமாக நேசிக்கும் வரை உங்களில் யாரும் உண்மை முஃமினாக முடியாது. (புகாரி)

விற்பனையில் உள்ள நமது பிற வெளியீடுகள்



குர்ஆன் ஹதீஸ் ஒளியில்

அல்லாஹ் நம்முடன்

ஆசிரியர் :

மௌலவி A.A. ஷைக் அப்துல் காதிர் மன்பஈ

(இர்பானீ ஷாஹ் நூரி)

தலைசிறந்த உலமாக்களின் பாராட்டுதல்களையும் பொது மக்களின் அமோக வரவேற்பையும் பெற்று இரண்டாம் பதிப்பு விற்பனையில் உள்ளது.

விலை ரூ. 40/-



ஷஜரா

மெஞ்ஞான வழித்தொடர்

ஸில்ஸிலயே பைஜிய்யா

தொகுப்பு :

மௌலவி A.S. ஜுபைர் அஹ்மத் பாகவி

(ஷுஹுதீஷாஹ் பைஜி)

காதிரிய்யா, சிஷ்திய்யா தரீகாவில் கண்மணி நாயகம் (ஸல்) முதல் நமது ஷைகு நாயகம் வரை உள்ள ஷைகுமார்களின் சங்கிலித் தொடர்–

மறைந்த வருடம், அடக்கஸ்தலம் போன்ற அரிய குறிப்புகள் மற்றும் அழகிய படங்களுடன்.

விலை ரூ. 25/-



நூருன்னூர்

இறைஞானப் பாடநூல்


தமிழில் : மௌலவி

A.A. ஷைக் அப்துல் காதிர் மன்பஈ

(இர்பானீஷாஹ் நூரி)


கன்ஜுல் இர்பான் கௌஸிஷாஹ் சிஷ்தி காதிரி அவர்களால் எழுதப்பட்டு சென்ற நூற்றாண்டில் வெளியாகி உலகளாவிய அளவில் உலமாக்களால் போற்றப்பட்ட ஞானப் பொக்கிஷம்.

விலை ரூ. 60/-




மனித வாழ்வின் இலட்சியங்கள்

ஆசிரியர் :
நூருல் மஷாயிக்
ஸையத் நூரி ஷாஹ் கிப்லா
தமிழில் : மௌலவி
**A.A. ஷைக் அப்துல்
காதிர் மன்பஈ**
(இர்பானீஷாஹ் நூரி)
விலை ரூ. 15/-



பைஅத் ஏன்? எதற்கு? எப்படி?

ஆசிரியர் :
கன்ஜுல் இர்பான்
கௌஸிஷாஹ் கிப்லா
தமிழில் : மௌலவி
A.A. ஷைக் அப்துல் காதிர் மன்பஈ
(இர்பானீஷாஹ் நூரி)
விலை ரூ. 20/-



தரீகத்தின் அவசியம்

ஆசிரியர் :
நூருல் மஷாயிக்
ஸையத் நூரி ஷாஹ் கிப்லா
தமிழில் : மௌலவி
**A.A. ஷைக் அப்துல்
காதிர் மன்பஈ**
(இர்பானீஷாஹ் நூரி)
விலை ரூ. 15/-

இந்நூல்...

★ 8 முதல் 14 வயது வரை உள்ள இஸ்லாமிய சிறுவர், சிறுமிகளுக்காக எழுதப்பட்டது.

★ முற்றிலும் சுன்னத் வல் ஜமாஅத் கொள்கை அடிப்படையில் எழுதப்பட்டது.

★ தமிழகமெங்கும் பல மதரஸாக்கள், ஸ்கூல்களில் பாடத்திட்டமாக வைக்கப்பட்டுள்ளது.

★ பள்ளிகளுக்கு ஆரம்ப புத்தகமாகவும், கோடை விடுமுறை மார்க்க பயிற்சி முகாம்களில் போதிக்கவும் மிக ஏற்றமானது என பல உலமாக்களால் புகழ்ந்துரைக்கப்பட்டது.

★ இதை திருமணப் பரிசாகவும், ஈஸால் ஸவாபாகவும், ரமழான் அன்பளிப்பாகவும், வியாபார விளம்பரங்களாகவும் வெளியிட்டு கல்விச் சேவை செய்ய முன்வருவோர் நம்மை தொடர்பு கொள்ளவும்.

★ தங்கள் பகுதியில் உள்ள மக்தப்களுக்கும், ஸ்கூல்களுக்கும் இந்நூலை அறிமுகம் செய்யுங்கள். அல்லாஹ் அந்த நன்மையை தங்களுக்கு வழங்குவான்.

★ மதரஸாக்கள், பள்ளிக்கூடங்களுக்கு மொத்தமாக சலுகை விலையில் வழங்கப்படும்.